M. K. தியாகராஜ பாகவதர், T. R. ராஜகுமாரி நடித்த

ஹரிதாஸ்

ஹரிதாஸ்

ஹரிதாஸ் — ஹிந்தி டப்பூன்

வாழ்விலோர் திருநாள் இன்றே
மான் விழி மடவார் கும்பல்—வீதிகளெங்கும்
கண் ஜாடை செய்யும் பெண் இவள் பார்வை
காமன் மலர்க்கணை தானே (வாழ்வில்)
விரைவொடு செல்லும் என் மனமிவளோடு
தெருவென நினையாதேனே
முகிலோ மயிலின் தோகையிதாமோ
முல்லை நகைக்குழலாளே
வில்லெனும் புருவ வாளே (வாழ்வில்)
மாதரின்றிப் பூதலமீது
மங்களம் இன்பமுமேது
எந்த ஊரோ நானறியாத
யௌவன ஸுந்தரியாரோ
எங்கும் இவள்போல் மங்கைகளேயே
கண்டதில்லையே பாரில்
மாதரின்றிப் பூதலமீது
மங்களம் இன்பமுமேது (வாழ்வில்)

ஜமீன்தார்—சாரதா

ஜமீந்தார் : நடனம் ஆடவேண்டும் நீ (நட)
அழகு நயனம் கைவழிய நடனம் ஆடவேண்டும்
சாரதா : ஆடணும் என்றால் பாடணும் தாளம் போடணும்
தமிழ்பாடத்தெரியாவிட்டாலெழுந்து ஓடணும் (நட)
சாரதா : கோழி உம்
ஜமீந்தார்: கொக்கு
சாரதா : இல்லே குருவி
ஜமீந்தார்: குயிலு
சாரதா : போல பாடணும் (தமிழ்)
பாடத் தெரியாவிட்டா லெழுந்தோடணும்(நட)

ஹரிதாஸ் — ராகம்—சாருகேஸி: தாளம்—ஆதி

பல்லவி : மன்மத லீலையை வென்றாருண்டோ
என்மேல் உனக்கேனே பராமுகம் (மன்மத)

அநுபல்லவி

நின்மதி வதனமும் நீள் விழியும் கண்டு
என்மதி மயங்கினேன் மூன்று உலகிலும்(மன்மத)

சரணம்

என்னுடனே நீ பேசினால் வாய்
முத்துதிர்ந்து விடுமோ—உனை
என்னேரமும் நினைந்துருகு மென்னிடம்
வந்தால் மெனக் கெடுமோ
உன்னை நயந்து நான்வேண்டியு மோர்முத்தம்
தந்தால் குறைந்திடுமோ
ஒருபிழையறியா என்மனம் மலர்க்கணை
பாய்ந்து அல்லல் படுமோ—மனங்கவர் (மன்மத)

ஹரிதாஸ் லக்ஷ்மீ ராகம்—ஸிந்து பைரவி, தாளம்—ஆதி

ஹரிதாஸ்: தொட்டதற்கெல்லாம் தப்பெடுத்தா
லென்ன சொல்வேன் பெண்மயிலே

லக்ஷ்மீ தப்பெடுக்கும் தொழில் எங்களுக்கில்லை

ஹரிதாஸ்: கோபமுமேன் வரபாமினியே

லக்ஷ்மீ: பேசுவதே கோபமென்றால் என்ன செய்வேன்

ஹரிதாஸ்: சாந்தமிதோ மடமானே
ஸத்குண ஸாந்தமிதோ மடமானே

லக்ஷ்மீ: போதுமே பரிஹாசம்

ஹரிதாஸ்: இனிபோதுமே பிடிவாதம்
(இருவரும்) நிஜ அன்பே பேரின்பம்

லக்ஷ்மீ: ராகம்—பிலஹரி, தாளம்—ஆதி

கதிரவன் உதயம் கண்டு கமலங்கள் முகம் மலரும்
நதிதடங்கள் நீராடும் கங்கையர் குடங்களுடன்
கல கல வெனும் பலவித ஒளியுடனே
ஸகல உலகும் மிகு குதூஹலமுடனே
கூடுமே—பரமனருள் புகழ்ந்து
பாடுமே—பரிவுடன் திசை திசை
ஓடுமே—மகிழ்ந்து துள்ளி வினை
யாடுமே—இளங் கன்றின் குரல்கேட்டு
கனிந்து வரும் பசு உன் போலே—அன்பு
சுரந்த மனிதரை காணேனே (கதிரவன்)

லக்ஷ்மீ: ராகம்—சுத்ததன்யாசி, தாளம்—ஆதி

கண்ணுவா மணி வண்ணுவா

சரணம்: வெண்ணெய் பால் திருடி உண்டவா—உயர்
விண்ணோர் முனிவரை ஆண்டவா—பசோதை
கண்ணே என்னிரு கண்ணே பங்கஜக் (கண்ணு)

மாதவன் உன் மஹிமை அறியார் அயல் (வீலை)
மாதரை விரும்பிக் கெட்டழிவார் உன்னை
மனிதனென்பார்மாட்டிடையை னென்பார்-மலர்(கண்)

லக்ஷ்மீ: ஹிந்தி ட்யூன்

எனது மனம் துள்ளிவிளையாடுதே
என் மனம்போலினி எல்லாம் செய்திடுவேன்
இன்புறப்பாடி விளையாடுவேன் இன்றே
மாடி மனையுடன் எல்லாம் இந்நேரம்
மண்பொருளாடை மணி பணி ஹாரம்
தேடிய செல்வம் என் அதிகாரம்
ஈடெனக் காரினிமேல் (எனது)
எனதெஜமான் எந்நாளும் நான்
கிழித்த கோட்டை தாண்ட மாட்டார்
கிழங்கள் பெரும் தொந்தரவில்லை
ராணி நானினிமேல் (எனது)

ரம்பா—ஹரிதாஸ் டுயேட் ராகம்— பைரவி, தாளம்—ஆதி

ரம்: எந்நாளும் இந்த இன்பங்குறை
யாதென்றுதுதிசொல்லும் ஸ்வாமி...எனக்கெந்நாளும்...
ஹரி. ஏனிந்த ஸந்தேஹம்உனக்கேனிந்தஸந்தேஹம்
என்னிடம் இன்பக் களஞ்சியமே எந்தன் இன்பக் களஞ்சியமே

ராகம்....மாண்டு, தாளம் திஸ்ரம்

ஹரிதாஸ்: உலகில் எவரும் நிகரில்லையே
உலகில் எவரும் நிகரில்லையே
ரம்பா: உல்லாசமாய் உலாவுவோம்
(இருவரும்) உள மகிழ்வுடனே

ராகம்ஹரிகேனி, தாளம்—ஆதி

ரம்பா: போதும் வேண்டாம் விளையாட்டு
ஆடைபுதிது நனைந்தது மேனிகுளிர்ந்தது (போ)
ஹரிதாஸ்: முடியாது உன்னை விடமாட்டேன்
ரம்பா: முடியாது உம்மை விடமாட்டேன்
தோழிகள்: முடியாது உம்மை விடமாட்டோம்

ராகம்—ஹம்ஸத்வனி தாளம்—ஆதி

ரம்பா: மயில்களழகாய்
ஹரிதாஸ்:—பயிலும் நடமே
ரம்பா: குயிலினிசையே குகூ குகூ

ஹரிதாஸ்: வான் நிறை மதியும்
ரம்பா: பால் நிற நிலவு
ஹரிதாஸ்: பூங்காவன அழகும்
(இருவரும்) கலந்தே (வான்நிறை)

ரம்பா: ஹரிந்திட்யூன்

உங்களை என் கண்ணுலே காண ஆசை கொண்டேனே
எனதுள்ளூறு(ம்) காதலினுல் நொந்தேன் கண்டேன்
எந்தன் கண்ணுளா எந்துரையே வாரும் உட்காரும்
புண்ணியனான்பண்ணினாள் வாழ்வினின்னுள்-ஆகுமே
என்மேல் பராமுகமா ஏழை என்மேல் வர்மமா
மன்னவா இன்பமும்தாரும் குறைதீரும் எந்தனைபாரும்
எனதுள்ளமும் வாடினேன் மையலாலே பலநாளாய்(உங்)

ஹரிதாஸ் ஹரிந்தி ட்யூன்

மாமுனி நாதர் கருணையாலே
மறைந்ததே இருள் மாயை
பரமனுல் உயர் மானிடஜன்ம மடைந்தும் பாழானேன்
அல்ப போகமே சதமெனநம்பி
அலைந்து திரிந்தேதனே....வீணே....அலைந்து திரிந்தேதனே
அன்னை தந்தையே தெய்வமெனு....மிவ்
உண்மை யுணர்ந்தேனே அன்னை தந்தையே

ஹரிதாஸ் விருத்தம் ராகம்....யதுகுலகாம்போதி

என் உடல் தனிலொரு ஈ மொய்த்த போதுங்கள்
கண்ணில் முள்ளைத்தாற்போல் இருந்தும்
என் உடல் நோய்கண் டிரவொடு பகலும்
கண் உறங்கா—துடலினைத்தும்
இன்னமுதூட்டி இன்பத்தாலாட்டி
என்னை ஆளாக்கிய பெருமைக்கு
என்னிடம் இயற்கையில் உங்கள்
உள்ளுருகும் அன்பினுக்கு ஒரு கைம்மாறேது

ராகம்—அடாணை

என் உயிர் தவப்பயன் அம்மையே அப்பா
இம்மையில் எனது கண் கண்ட
என் அருட் கடவுளம்மையே அப்பா
எனக்கொரு நற்கதியுண்டோ
என் அரும் கதியாம் அம்மையே அப்பா
என் பிழை பொறுத்தருள்வீரோ

என் உயிர் துணையாம் அம்மையே அப்பா
எங்கு சென்றுங்களைக் காண்பேன்
அம்மையப்பா உங்கள் அன்பை மறந்தேன்
அறிவில்லாமலே நன்றி மறந்தேன்
தாயே தந்தையே என்
அருமைத்தாயே தந்தையே

ஹரிதாஸ்

அன்னை தந்தையும் தானே பாரில்
அண்டசாரசரம் கண்கண்ட தெய்வம் (அன்)
தாயினுங் கோயிலிங்கேது
ஈன்ற தந்தைசொல் மிக்கதோர் மந்திரமேது
சேயின் கடன் அன்னை தொண்டு
புண்ணிய தீர்த்தமும் மூர்த்திஸ்தலமும் இதில் உண்டு (அன்)
தாயுடன் தந்தையின் பாதம்
என்றும் தலைவணங்காதவன் நாள் தவறுமல்
கோயிலில் சென்று என்ன காண்பான்
நந்தகோபாலன் வேண்டும் வரம் தருவானே
பொன்னுடன் என்பொருள் பூமி
பெண்டிர் புத்திரரும் புகழ் இத்தரை வாழ்வும்
அன்னை பிதாவின்றி ஏது
மரம் ஆயின் விதையின்றி காய்கனி ஏது (அன்)

ஜமீந்தார்....சாரதா:

ஜமீ: கவலையை தருவது காரிகை செயலே
கவலையற்றூர் கண்கள் கலங்கும் வகையிலே

சார: [ஐயோ அப்படியே நம்பிட்டாரே முருகா]
முருகா—முருகா—முருகா எனக்
கொருதுணையில்லை முருகா
[நான் சொல்றதைக் கேளுங்க]

ஜமீ: [கேக்கவா]
உன் மொழியை....என்னிரண்டு காது கேக்காதே
உடல்பெருத்த மனிதர்களும் பொய்தான் புகன்றிடுவாரோ
போவெளியே

சார. என்ன செய்வேன எங்கே செல்லுவேன் நான் ஏது

ஜமீ: [பசப்புக்காரி என்னையா ஏமாத்துரே] [மறியேன் மறைவாக இவ்விடத்தில் நடந்த சேதியாலே மாதுனை தானறிவேன் விஷயம் புரிஞ்சாச்சு

சார: [தாசு உண்மையை பேசு]
ஸ்வாமி நான் உம்மையடைய என்ன தவம்செய்தேன்
சொற்புத்தியை கேட்கலாமோ
ஜமீ: [இந்தா இனி என்ன சொன்னலும் உன்னை]
சொப்பனத்தாலும் நினையேன் சுப்ரமண்யாசுவாமி அவ
அற்பத்தனமாய் நடந்தாய் அறிவிழந்தாய் [ரறிய
அற்பனிவனை நினைந்தாய் [இல்லேண்ணு சொல்றே]
வதனமே சொல்லுதே பெண்ணே
[தெரியுதே கண்ணடிபோல]
பளிங்கு கண்ணடிபோல் (வதன)

ஜம்பா ராகம்....முகாரி

காதகி கிராதகி நான்
கல்மனது கொண்டு குல
மாதர்களை வயிரெறியச் செய்தேன் (காதகி)
ஸாது ஹரிதாசை கொடும்
வஞ்சனை புரிந்து....பர
தேசியாய் போகச் சதிசெய்தேன்
ஏன் பிறந்தேன் நான் பாவி
ஏன் பிறந்தேன்

லக்ஷ்மி ராகம் மாயாமாளவகௌளை தாளம்—ஆதி

பல்லவி. எனதுயிர் நாதன் இருதயமும் கொண்டே
எனைப்பிரிந்தார்—இனி
என்ன என் வாழ்வு

தொகையறு

ஹீனை நள்ளாயினி....ஸாவித்ரிமுதல்
சிறந்த ஸதிகள் பிறந்த
மேதினி தனிலேன் பாதகி நான் பிறந்தேன்
வினையின் பயனடைந்தேன்
ஆதரவாய் ஒருநாளும் அவருடன்
அன்பு கலந்திலேனே அவர்
பாதமலரைப் பணிந்தறியேன் இன்று
பரிதாபங் கொண்டேன்

அநுபல்லவி

பனிமதியின்றி நிலாவொளி உண்டோ
பதி அன்பின்றி மெய் இன்பமுண்டோ (எனதுயிர்)

ஹரிதாஸ்: ராகம்—தவரோன், தாளம்—ஆதி

கிருஷ்ண—முகுந்தா முராரே
கிருஷ்ண—முகுந்தா முராரே ஜெய (கிருஷ்ண)
கருண ஸாகர கமலா காயக
கனகாம்பரதாரி—கோபாலா (கிருஷ்ண)
காளிங்க மர்த்தன கம்ஸநிஷூதன
கமலாயத நயன கோபாலா (கிருஷ்ண)
குடில குந்தளம் குவலய தவநீலம்
மதுர மூரளிரவ லோலம் (கிருஷ்ண)
கோடி மதன லாவண்யம் கோபீ
புண்யம் பஜாமி கோபாலம் (கிருஷ்ண)
கோயிஜன மன மோஹன வியாபக
குவலய தள நீல....கோபாலா (கிருஷ்ண

ஹரிதாஸ்: ராகம்—ப்யாகடை, தாளம்—ரூபகம்

பல்லவி

நிஜமா இது நிஜமா
நீ அடிமைக்கும் காகூஷி தந்தது

அநுபல்லவி

அஜனெடு கைலாஸபதி
அறி யாத ஆதிமூலமே

சரணம்

நாமமொரு முறை சொன்ன என்
நாக்குத்தந்த பாக்கியமோ
நாயடிமையின் தாய்
நல் அனுக்கிரஹமோ
ஓம் நமோ நாராயண ஓம் நமோ நாராயண
ஓம் நமோ நாராயண ஓம் நமோ நாராயண (நிஜமா)

சுபம்! சுபம்!! சுபம்!!!

முத்துக்குமரன் அச்சகம், 14-ஏ, குப்பையர் தெரு, சென்னை-1.

உண்மையான 64 லீலா விநோதப் படங்களுடன்

கோக்கோகம் அல்லது இரதி மன்மதன் திரு விளையாடல்

மர்ம விஷயங்கள் பச்சையாக விளக்கப்பட்டுள்ள கொக் கோக சாஸ்திரம் இதில் காம உற்பத்தி, ஆண், பெண் சரீர

அமைப்பு நான்கு வகை பெண்களுடைய லக்ஷணம் சம்போகம் செய்யவேண்டிய முறை, அமிர்தநிலை ஆலிங்கன வகைகள், பெண்களை வசி கரப் படுத்தும் மார்க்கம் மர்ம மான லீலா சாஸ்திரத்துக் குறிய படமும். இரதி மன்மத னுடைய உருவப்படமும், மதன சக்கரப்படமும் (பூஜாவிதானத்தோடு) அமிர்தநிலை சக்கரம் ஸ்ரீ பஞ்சாக்ஷர் மந்திரசக்கரம் முதலியவை அடங்கியது. ரூ. 4—0—0

ஹிப்நாடிஸ மெஸ்மரிசமென்னும்

வாயுவேக மந்திரசிய சாஸ்திரம்.

இந்த நூலில் மந்திரசியத்தைப் பற்றியும் அதை அப் பியாசிக்க வேண்டிய வழிகளைப்பற்றியும் எழுதப்பட்டிருப் பதுடன் உலகில் பிறர் கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப்பற்றியும், இறந்த பெரியோர்களுடன் எப்படி பேசு வது என்பதைப்பற்றியும், நன்கு எழுதப்பட்டிருக்கின்றன. சபைதனில் விரலைக்காட்டி மற்றவர்களை தூங்கவைக்கும் வழி களைப் பற்றியும் மந்திரசிய சக்தியினால் நாம் உலகிற்குச் செய் யக்கூடிய நன்மை மிகுந்த செல்வாக்குடன் இருக்க விரும்புகின் றவர்களுக்கு இந்நூல் தேவாமிர்தம் போன்றதாகும்.

[சித்திரப்படங்களுடன்] விலை ரூபா 3—0—0

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன்,

சென்னை.

உண்மையான 64 லீலா விநோதப் படங்களுடன்

கொக்கோகம் அல்லது இரதி மன்மதன் திரு விளையாடல்

மர்ம விஷயங்கள் பச்சையாக விளக்கப்பட்டுள்ள கொக்கோக சாஸ்திரம் இதில் காம உற்பத்தி, ஆண், பெண் சரீர அமைப்பு நான்கு வகை பெண்களுடைய லக்ஷணம் சம்போகம் செய்யவேண்டிய முறை, அமிர்த நிலை ஆலிங்கனவகைகள், பெண்களை வசீகரப் படுத்தும் மார்க்கம் மர்மமான லீலா சாஸ்திரத்துக்குறிய படமும், இரதி மன்மதனுடைய உருவப்படமும், மதன சக்கரப்படமும் (பூஜா விதானத்தோடு) அமுர்தநிலை சக்கரம் ஸ்ரீ பஞ்சாக்ஷர் மந்திரவசீகர் சக்கரம் முதலியவை அடங்கியது.

ரூ. 4—0—0

ஹிப்நாடிஸ மெஸ்மரிசமென்னும்

வாயுவேக மந்திரவசிய சாஸ்திரம்.

இந்த நூலில் மந்திரவசியத்தைப் பற்றியும் அதை அப்பியாசிக்க வேண்டிய வழிகளைப்பற்றியும் எழுதப்பட்டிருப்பதுடன் உலகில் பிறர் கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப்பற்றியும், இறந்த பெரியோர்களுடன் எப்படி பேசுவது என்பதைப் பற்றியும், நன்கு எழுதப்பட்டிருக்கின்றன. சபைதனில் விரலைக் காட்டி மற்றவர்களை தூங்கவைக்கும் வழிகளைப் பற்றியும் மந்திரவசிய சக்தியினால் நாம் உலகிற்குச் செய்யக்கூடிய நன்மை மிகுந்த செல்வாக்குடன் இருக்க விரும்புகின்றவர்களுக்கு இந்நூல் தேவாமிர்தம் போன்றதாகும்.

[சித்திரப்படங்களுடன்] விலை ரூபா 3-0-0.

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன் மதராஸ்.